**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.**

S.C.No. 259/2023

Deposition of witness – PW17

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ்பாபு | Caste | : |
| S/o.W/o. | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 28.07.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

எதிரி ஆஜர்.

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை :**

நான் தற்பொழுது தமிழ்நாடு தீயணைப்பு துறை சேலம் மாவட்டத்தில் தீ தடுப்பு பிரிவில் நிலைய அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.01.2023 அன்று நான் ஓமலூர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலையத்தில் நிலைய பொறுப்பு அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். அன்று மதியம் 3 மணி அளவில் ஒரு விவசாய கிணற்றில் ஒரு நபர் மிதப்பதாக தகவல் கிடைக்கப்பெற்று எனது குழுவினருடன் உடனே அவ்விடம் சென்று பார்த்த பொழுது ஒரு பாதி நெஞ்சுவரை துண்டிக்கப்பட்ட ஒரு ஆண் பிரேதத்தின் ஒரு பகுதியை முதலில்

கிணற்றிலிருந்து எடுத்துக் கொடுத்தோம். மேலும் அந்த கிணற்றில் உடல் பாகம் இருப்பதாக தெரியவந்ததன் பெயரில் மின் மோட்டார் மூலம் கிணற்றில் இருந்த நீரினை சுமார் 40 அடி ஆழமுள்ள கிணற்றில் இருந்த நீரினை வெளியேற்றி அந்த பிரேதத்தின் இதர உடல் உறுப்பு பாகங்களையும் கைப்பற்றி, அப்பொழுது இருந்த காவல் ஆய்வாளர் தொல்காப்பியன் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். பின்னர் நிலையம் திரும்பினேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

எங்கள் தீயணைப்புத்துறை அலுவலகத்தில் இருந்து சம்பவ இடம் என்பது 15 ல் இருந்து 18 கிலோமீட்டர் தூரம் இருக்கும். எங்கள் அலுவலகத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 20 நிமிடங்கள் ஆனது. நெஞ்சு பகுதி வரை உள்ள சடலத்தின் பாகமானது கிணற்றில் மிதந்து கொண்டுதான் இருந்தது, சாக்கு பையில் இல்லை. மற்ற பாகங்களை சாக்குப் பையில் நாங்கள் பின்னால் கைப்பற்றினோம். தீயணைப்புத் துறையை சேர்ந்த மீட்பு படையினர் இரண்டு பேர் கிணற்றுக்குள் இறங்கி உடலின் பாகங்களை வெளியில் எடுத்தோம். எங்களிடம் இருந்த மோட்டார் உதவியுடன் அந்த தண்ணீரை வெளியேற்றினோம். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு வேறு மோட்டார் ஏதேனும் வைத்து தண்ணீரை வெளியேற்றிக் கொண்டிருந்தார்களா என்றால், அவ்வாறு எதுவும் வெளியேற்ற வில்லை. நாங்கள் கேட்டதன் வெளியில் இருந்து ஒரு மோட்டார் ஏற்பாடு செய்து அதன் உதவியுடன் தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இரவு முழுவதும் நாங்கள் தண்ணீரை இறைத்தோம். காலையில் ஆறு மணி அளவில் மற்ற உடல் பாகங்களை மீட்டு எடுத்து கொடுத்தோம். அந்த உடல் பாகங்கள்

மொத்தம் ஆறு துண்டுகளாக இருந்தது. அந்த உடல் பாகங்கள் யாருக்கு சொந்தமானது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த பாகங்களை யார் கொண்டு வந்து போட்டார்கள் என்ற விபரமும் தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.07.28 07:57:01 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சேலம்.